# பாதுகாப்பு அமைச்சு
# இலங்கை விமானப்படை

# இலங்கை விமானப் படையில் III ஆம் தர பணி உதவியாளர் பதவிக்கு சிவில் சேவையாளர்களை நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்த்தல்

இலங்கை விமானப் படையில் தற்போது வெற்றிடமாகவுள்ள வேலை உதவியாளர் பதவிகளை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இந்த விளம்பரத்தின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப, விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, பணிப்பாளர் (சிவில் நிர்வாகம்), இலங்கை விமானப் படைத் தலைமையகம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர என்ற முகவரிக்கு 2026.05.15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

## அடிப்படைத் தகைமைகள்

- இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எப்பகுதியிலும் சேவை செய்ய, அனைத்து வகையிலும் உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்பதுடன் இந்தப் பதவியின் கடமைகளைச் செய்வதற்குப் போதுமான உடல் தகுதி மற்றும் சிறந்த குணநலன் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- வயது: 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

## கல்வித் தகைமைகள்

- கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது ஆறு பாடங்களுக்குக் குறையாமல் இரண்டு திறமைச் சித்திகளுடன் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு : க.பொ.த. (சா.த.) பரீட்சைப் பெறுபேற்று அட்டவணையின் போட்டோபிரதி கட்டாயம் இணைக்கப்பட வேண்டும்.**

## சம்பளம்

- சம்பளக் குறியீட்டு எண் : PL 1 – 2025
- சம்பள அளவுத்திட்டம் : ரூ.40,000 – 10 x 450 – 10 x 490 – 10 x 540 – 12 x 590 – ரூ.61,880/=

**தகைமைபெற்ற விண்ணப்பதாரர்களுக்காக நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்காணலின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.**

இணைப்பு

### இலங்கை விமானப் படையில் III ஆம் தர பணி உதவியாளரை நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கான மாதிரி விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில்) : ..............................
..............................
2. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) : ..............................
..............................
3. நிரந்தர முகவரி : ..............................
4. பிறந்த திகதி : .............................. பாலினம் : ஆண் / பெண் ..............................
5. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது : ஆண்டுகள்: .................. மாதங்கள் .................. நாட்கள் ..................
6. திருமண நிலை : ..............................
7. மாவட்டமும் அருகிலுள்ள பொலிஸ் நிலையமும : ..............................
8. தேசிய ஆளடையாள அட்டை எண் : ..............................
9. தொலைபேசி எண் : ..............................
10. கல்வித் தகைமைகள் : ..............................
..............................
(க.பொ.த. (சா.த.) பரீட்சையின் பெறுபேற்று அட்டவணை இணைக்கப்பட வேண்டும்)
11. தொழில் தகைமைகள் (ஏதாவது இருப்பின்) : ..............................
..............................
12. வேறு விடயங்கள் : ..............................
..............................

என்னால் இவ்விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள சகல விடயங்களும் எனது அறிவுக்கெட்டிய வகையில் உண்மையானதும் சரியானதுமென வெளிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள ஏதேனும் விடயங்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நான் சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தகைமையற்றவனாவேன் என்பதுடன் இவ்விடயம் நியமனத்தின் பின்னர் தெரியவரின் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நானறிவேன்.

.............................. ..............................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

விமானப்படைத் தளபதி

SELACINE